# ICSE 2023 EXAMINATION

# SPECIMEN QUESTION PAPER

# TAMIL
# (SECOND LANGUAGE)

---

*Maximum Marks: 80*

*Time allowed: Three hours*

*Answers to this Paper must be written on the paper provided separately.*

*You will not be allowed to write during the first 15 minutes.*

*This time is to be spent in reading the question paper.*

*The time given at the head of this Paper is the time allowed for writing the answers.*

---

***Section A** is compulsory – **All** questions in **Section A** must be answered.*

*Attempt **any four** questions from **Sections B,** answering at least **one** question each from the **two** books you have studied and **any two** other questions from the same books you have studied.*

*The intended marks for questions or parts of questions are given in brackets [ ].*

---

## SECTION A

*(Attempt **all** questions from this Section.)*

**Question 1**

Write a short composition in **Tamil** of approximately **250** words on **any one** of the following topics:— [15]

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** குறித்து **250** வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக:–

(i) **'இயற்கை வளங்கள் பாதுகாப்பு'** - என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(ii) 'இந்தியப் பொருளாதாரம், வளர்ச்சிப் பாதையில் செல்கிறதா? அல்லது அழிவுப் பாதையில் செல்கிறதா?' _ என்பது குறித்து இருவர் பேசுவது போன்று உரையாடல் ஒன்று அமைக்கவும்.

(iii) 'பெண்களுக்கு உண்டாக்கப்படும் வன்கொடுமைகளும் , அவை தீர்வதற்கான வழிமுறைகளும்' - என்ற தலைப்பில் பெண்கொடுமைப் பிரச்சனைகளுக்கான தீர்வுகளைக் கட்டுரை வடிவில் தருக.

(iv) 'எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்' -- என்ற கருத்தை மையமாகக் கொண்டு கதை ஒன்று எழுதுக.

(v) கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, உமக்குத் தோன்றும் எண்ணங்களையும், படம் குறிப்பிடும் செய்திகளையும் இணைத்து கட்டுரை ஒன்று எழுதுக.



**Question 2**

Write a letter in **Tamil** in approximately **120** words on any **one** of the topics given below:— [7]

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று**குறித்து 120 வார்த்தைகளுக்கு மிகாமல் கடிதம் எழுதுக:—

(i) முதியோர் இல்லத்தில் நீ கொண்டாடிய உன்னுடைய பிறந்த நாள் விழா குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

(ii) நீ வசிக்கும் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் வரைக.

**Question 3**

Read the passage given below and answer in **Tamil** the questions that follow, using your own words as far as possible:—

பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் ஐந்து வினாக்களுக்கும் உன் சொந்தநடையில் விடை தருக:–

தமிழ்நாட்டுக் காளத்தி மலையிலே தோன்றிய வேடன் ஒருவன், வடநாட்டுக் கங்கைக் கரையில் தோன்றினான் மற்றொருவன். அவ்விரு வேடர்களாலும் வேடர்குலம் பெருமையுற்றது. காளத்தி வேடனைக் கண்ணப்பன் என்றும், கங்கை வேடனைக் குகன் என்றும் இலக்கிய உலகம் போற்றுகிறது. இந்த இரண்டு பேர்களும் உயர்ந்த அன்பு நெறியைக் கடைபிடித்து அழியாப் புகழ் பெற்றனர். இறைவன் காளத்திநாதன் மேல் கொண்ட அன்பு மிகுதியால் தன் கண்களையே இறைவனுக்கு ஒப்பியதால் (கண் + அப்பியதால்) 'கண்ணப்பன்' ஆனான் என்று அவனுடைய அன்பின் திறத்தை மாணிக்கவாசகர் போற்றுகின்றார்.

திருவாசகத்திலும், தேவாரத்திலும் கண்ணப்பன் பெருமை பேசப்படுவதால் சைவ சமயத்தை நிலைநிறுத்திய நால்வருக்கும் முன் தோன்றியவன் என்பது நன்கு தெரிகிறது. "காளத்திநாதனை வணங்கிய திருஞான சம்பந்தர் கும்பிட்ட பயன் காண்பார் போல; வேத பெருமானாகிய கண்ணப்பனைக் கை தொழுதார்" என்று சேக்கிழார் அழகாக எழுதியுள்ளார்.

கோசலநாட்டு இளவரசனான இராமன், தாயின் சொல்லைத் தலைக்கொண்டு தனக்குரிய நாடு துறந்து கங்கைக் கரையை வந்தடைந்தான் என்று அறிந்த குகன், அவரைக் காணப் புறப்பட்டான். வான்மிகி முனிவர் (புற்றிலிருந்து மீண்டவர்) எழுதிய வடமொழிக் காவியத்தில் குகன் இராமனைக் காணப் புறப்படும் கோலம், ஓர் அரசன் மற்றோர் அரசனைக் காண எழுந்த தன்மையில் அமைத்திருக்கின்றார். ஆனால் கம்பர் ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவனாகக் குகன் கோலத்தைத் தருகின்றார்.

காளத்தி வேடன் தனக்கினிய இறைச்சியை இறைவனுக்கும் இனியதாகும் என்று அதனை எடுத்து ஊட்டியவாறே; குகன் தனக்கினிய கொம்புத்தேனையும் மீனையும் எடுத்துக் கொண்டுச் சென்றான். அவற்றை இராமன் திருமுன் வைத்து, ஐயனே! "இவற்றை நான் திருத்திக் கொணர்ந்தேன். தேவரீர்! தாங்கள் திருவமுது செய்தருள வேண்டுகின்றேன்", என்று வேண்டி நின்றான். அச்சமயத்தில் அவருடன் இருந்த மாதவர் சிலர் குகனின் மனப்பான்மையை அறியாதவராய், தகாத பொருளை இராமனுக்கு அளித்து அபச்சாரம் செய்துவிட்டான் என்று புலம்பினர். ஆனால், இராமனோ.. இது குகனின் உள்ளத்து அன்பினால் அமைந்த தூய காதல் என்றார். அதுமட்டுமின்றி இவ்வுணவுகள் அன்பினால் படைத்ததாகையால் அமுதினும் சீர்த்தமாயிற்று என்கிறார் - அவர் தான் தவக்கினிய அன்புள்ளம் கொண்டவராயிற்றே!

வினாக்கள்:

(i) காளத்தி வேடனும், கங்கை வேடனும் எவ்வாறு புகழ் பெற்றனர் என்பதை எழுதுக. [2]

(ii) கண்ணப்பன் யாவருக்கெல்லாம், முன் தோன்றியவன் என்று சேக்கிழார் கூறியுள்ளார்? [2]

(iii) இந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ள பக்தி நூல்களின் பெயர்களை' எழுதுக. [2]

(iv) குகன் இராமனைக் காணச் சென்ற காட்சி எவ்வாறு கூறப்பட்டுள்ளது - என்பதை எழுதுக. [2]

(v) வேடன் இராமனுக்கு அளித்தப் படையல் குறித்து, தவத்தவர்களின் மனநிலை, இராமனின் செயல் ஆகியனவற்றை விளக்குக. [2]

**Question 4**

Choose the correct answer for the following GRAMMAR MCQ according to the instructions given:— [8]

வினாவிற்குரிய விடையை அடைப்புக் குறிக்குள் கேட்டபடி தேர்ந்தெடுத்து எழுதுக:–

(i) கிராமங்களிள் திறுவிழாக்கள் சிரப்பாக நடைபெற்றண.

(a) கிராமங்களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

(b) கிராமங்களிள் திறுவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

(c) கிராமங்களிள் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றண.

(d) கிராமங்களிள் திருவிழாக்கல் சிறப்பாக நடைபெற்றண.

[ல/ள, ர/ற, ண/ந/ன - எழுத்துப் பிழைகள் இல்லாத வாக்கியத்தைத் தேர்வு செய்க]

(ii) "நொறுக்குத் தீனி சாப்பிடு", என்றார் என் அம்மா.

(a) "நொறுக்குத் தீனி தின்", என்றார் என் அம்மா

(b) "நொறுக்குத் தீனி உண்", என்றார் என் அம்மா.

(c) "நொறுக்குத் தீனி கடி", என்றார் என் அம்மா.

(d) "நொறுக்குத் தீனி குடி", என்றார் என் அம்மா.

[மரபுப் பிழை இல்லாத வாக்கியத்தைத் தேர்வு செய்க]

(iii) அலை ; அழை

(a) கடல் நீர்நிலை ; கூப்பிடுதல்

(b) கூப்பிடுதல் ; புற்று

(c) நண்டு ; அலைதல்

(d) கூப்பிடுதல் ; தயிர்

[ஒலி வேறுபாட்டுச் சொற்களின் சரியான பொருளைத் தேர்வு செய்க]

(iv) கிச்சனில் வேலை செய்யும் பொழுது மொபைல் போனைப் பயன்படுத்தக் கூடாது.

(a) சமையல் அறை, செல்பேசி

(b) தானி, செல்லிடப்பேசி

(c) வானூர்தி, அலைபேசி

(d) பள்ளி தொலைபேசி

[ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்கள் உள்ள, வாக்கியத்தைத் தேர்வு செய்க]

(v) நான் அதிகாலையில் எழுந்தேன். நான் பயிற்சி செய்தேன். நான் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றேன்.

(a) நான் அதிகாலையில் எழுந்து, பயிற்சி செய்ததால் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றேன்.

(b) நான் அதிகாலையில் எழுந்துப் பயிற்சி செய்தேன். அதனால் நான் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றேன்.

(c) நான் அதிகாலையில் எழுந்தேன். அதனால், நான் பயிற்சி செய்தேன். நான் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றேன்.

(d) நான் அதிகாலையில் எழுந்தேன். நான் பயிற்சி செய்தேன். அதனால் நான் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றேன்.

[சரியான தொடர் வாக்கியத்தைத் தேர்வு செய்க]

(vi) குரங்கு கிளைக்குக் கிளை ___________ (தாவு) கீழே விழுந்தது.

(a) தாவினால்

(b) தாவியதால்

(c) தாவுவதால்

(d) தாவுகிறதால்

[வினைச் சொல்லுக்கு ஏற்ற வேற்றுமை உருபுச் சொல்லைத் தேர்வு செய்க]

(vii) அணில் தோட்டத்தில் பழங்களைக் கொறிக்கின்றன.

(a) அணில் தோட்டத்தில் பழங்களைக் கொறிக்கின்றனர்.

(b) அணில் தோட்டத்தில் பழங்களைக் கொறிக்கின்றான்.

(c) அணில் தோட்டத்தில் பழங்களைக் கொறிக்கின்றார்கள்.

(d) அணில் தோட்டத்தில் பழங்களைக் கொறிக்கின்றது.

[இலக்கணப் பிழை இல்லாத வாக்கியத்தைத் தேர்வு செய்க]

(viii) தேர்வுக்குப் படிக்காமல் என்ன செய்கிறீர்கள் என்றார் ஆசிரியர்

(a) "தேர்வுக்குப் படிக்காமல் என்ன செய்கிறீர்கள்?" என்றார் ஆசிரியர்.

(b) தேர்வுக்குப் படிக்காமல் என்ன செய்கிறீர்கள்? என்றார் ஆசிரியர்.

(c) தேர்வுக்குப் படிக்காமல் என்ன செய்கிறீர்கள் என்றார் ஆசிரியர்?

(d) தேர்வுக்குப் படிக்காமல், "என்ன செய்கிறீர்கள்?" என்றார் ஆசிரியர்!

[சரியான நிறுத்தற் குறிகள் இட்ட வாக்கியத்தைத் தேர்வு செய்க]

## SECTION B

*(Attempt **four** questions from this Section.)*

*(You must answer at least **one** question from each of the **two** books you have studied and any **two** other questions.)*

**சரித்திரச் சம்பவங்கள் (Charitra Sambavangal)**

**(ஆசிரியர் - வாண்டுமாமா) (By - Vaandumama)**

பெரிய கோயிலெடுத்த சோழப் பேரரசர்

**Question 5**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

'கண்ணீர் திரளச் சோகமே வடிவாக உட்கார்ந்திருக்கிறாள் ஒரு பெண். பூரண கர்பிணியும் கூட. ஆனால் கணவனின் பிரிவால் கலங்கி இருக்கிறாள். கொடிய பஞ்சம் ஏற்பட்டது. நாடே நசித்துப் போகும்படியான வறட்சி கண்டது. கஞ்சிக்கும் வழியில்லை. அழகு மனைவியின் அவஸ்தையைக் காணச் சகியாத கலைஞன் - கணவன் - காசு சேர்த்துவர, காஞ்சியை விட்டு வேற்றூர் போனான் ... '

**வினாக்கள்:-**

(i) இராஜராஜன், பெரிய கோயிலெடுக்கக் காரணமான கதையை எழுதுக. [2]

(ii) சிற்பிகள் தஞ்சையில் குழுமக் காரணம் என்ன ? அவர்களிடம் இராஜராஜன் கூறியது யாது? [2]

(iii) பாலவர்மன் சோமவர்மனைப் பார்த்து யாது கேட்டான்? சோமவர்மன், பாலசிற்பிதான் தன் மகன் என்பதை எவ்வாறு தெரிந்து கொண்டான்? [3]

(iv) விஜயாலய வம்சத்தின் எட்டாவது மன்னன் யார்? அவருடைய பெருமைகளை விவரிக்கவும். [3]

ஜெய் மல்லும் புட்டாவும்

**Question 6**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

> 'பதினாறே வயதான இளைஞர்களான அவர்கள் எத்தகைய சாகஸம் புரிந்தார்கள்! இத்தகைய இளைஞர்களைக் கொண்ட பாரதத்தை என்றைக்கு நாம் நம்வசப் படுத்திக் கொள்ளப் போகிறோம்! என்று அக்பர் மலைக்கலானார். அந்த இளஞ் சிங்கங்களின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்படி செய்ய நினைத்தார்'.

**வினாக்கள்:**

(i) ராஜபுத்திரர்களின் போர் 'அந்நியர்கள் வியந்து போற்றும் வகையில்' அமைந்ததற்குக் காரணம் யாது? [2]

(ii) இராஜபுத்திரர்கள் அணிந்த ஆரஞ்சு வண்ண ஆடையின் சிறப்பு யாது? [2]

(iii) புட்டாவின் தாய் ஆற்றிய வீர உரையைத் தொகுத்து எழுதுக. [3]

(iv) உதய சிம்மன் யார்? அவன் சித்தூரை விட்டு ஓடக் காரணம் யாது? பிறகு என்ன செய்தான்? [3]

மல்லன் மாறப்பன்

**Question 7**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

> 'முகமூடி கொள்ளையன், மாறப்பனின் குரல் கேட்டுச் சற்றே அதிர்ந்துதான் போனான். தப்பி ஓடும் தன் வழியில் குறுக்கிடும் மாறப்பனை அவன் எதிர் பார்க்கவில்லை. துரத்திவரும் மாறப்பனின் குதிரையின் வேகத்தைக் கண்டவன், சட்டென்று சுதாரித்தவாறு, தன் கைத்துப்பாக்கியை, துரத்தி வரும் உருவத்தின் மீது குறி வைத்தபடி, தன் குதிரையைக் கால்களால் உந்த, முன்னாள் விரட்டிக் கொண்டு போனான், கொள்ளையன் ருத்ரய்யா' .

**வினாக்கள்:**

(i) மாறப்பனுக்குச் சிகிச்சை அளித்த வியாபாரிகள், மாறப்பனிடம் கூறியவை யாவை? [2]

(ii) கிருஷ்ண தேவராயரின் அன்றாட அலுவல்களை எழுதுக. [2]

(iii) குருதேவர் இளவரசியிடம், அவளுடைய தந்தையைப் பற்றிக் கூறிய செய்தியினை விவரி. [3]

(iv) விஜய நகரத்துக்குச் செல்ல நினைத்த மாறப்பன், சந்திரகிரிக்குச் சென்றது ஏன்? விளக்கமாக எழுதுக. [3]

## இராஜராஜ சோழன் (Rajaraja Cholan)

## சரித்திர நாடகம் (Historical Drama)

## ஆசிரியர் அரு. ராமநாதன் (By – R. Ramanathan)

**Question 8**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

> 'ஆட்டக்கலை அருள் வழியிலே செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அதை அம்பலவாணன் சந்நதியிலே...... கலைத் துறைக்குப் பயன்படவேண்டும் என்பதற்காகக் கால வெள்ளத்தால் அழியாத . மாபெரும் கற்கோயில். நங்கையரெல்லாம் நடனக்கலையால் நளினம் பெறவேண்டும் என்பதற்காக..ஆலயத்தில் அருமைப் புதல்வியின் ஆடல் அரங்கேற்றம்.'

**வினாக்கள்:**

(i) தஞ்சை அரண்மனையின் மேன்மாடத்தில் அமைக்கப்பெற்ற தமிழன்னைச் சிலையின் அணிகலன்கள் யாவை? [2]

(ii) 'பஞ்சின் மெல்அடிப் பாவை.........' -- எனத் தொடங்கும் பாடலை எழுதுக. [2]

(iii) பிரகதீஸ்வரர் ஆலயம் எங்கு, யாரால் கட்டப்பட்டது? அதன் வேறு பெயர்கள் யாவை? அக்கோபுரத்திற்கு 'இராஜகோபுரம்' என்று பெயர்வரக் காரணம் யாது? அப்பெயரைச் சூட்டியவர் யார்? [3]

(iv) இராஜ ராஜன் தன் அக்கா குந்தவ்வையாரின் கட்டளைப்படி நிறைவேற்றிய செயல்கள் யாவை? [3]

**Question 9**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

'இராஜேந்திரா, எனக்கா உயிர்ப்பிச்சை அளிக்கிறாய்? தோற்றுச் சிறைப்படும் அந்த அவமானத்தைச் சுத்த வீரனாகிய நான் சகியேன். என் உயிர் போகும் வரை போரிட்டு வீர சுவர்க்கம் புக வேண்டுமென்கிற என் ஆசையைக் கெடுக்கிற நீ! வீரத்தை மதிப்பவனாயிற்றே! உன் கத்தியை உறையினுள் சொருகுவதற்குப் பதிலாக என் உள்ளத்தில் சொருகிவிடு......'

**வினாக்கள்:**

(i) இராஜராஜர், குந்தவியின் நடன அரங்கேற்றத்திற்கு யார் யாருக்கெல்லாம் அழைப்பு விடுத்தார்? யாரை அழைக்கவில்லை? [2]

(ii) இராஜராஜர் தன் மகனைப் போருக்கு மனுப்புவது குறித்து வீரமாதேவியிடம் யாது கூறினார்? [2]

(iii) மதுராந்தகர் பாலதேவரின் சதி ஓலைகள் குறித்து கூறியதையும், அதற்கு இராஜ ராஜர் கூறியதையும் தொகுத்து எழுதுக. [3]

(iv) இராஜராஜர் சோழ சாம்ராஜ்யத்திற்காக, வீரமாதேவியிடம் வேண்டியது யாது? விளக்கி எழுதுக. [3]

**Question 10**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

'நதியில் வெள்ளம் பெருகுவதையும், கடல் நீர் பொங்குவதையும் ஏன் என்று கேட்க முடியுமா? வசந்தம் வர மலர்கள் மலர்வதையும், மழை பொழிய மண் குளிர்வததையும் ஏனென்று கேட்க முடியுமா? அப்பா! சின்னஞ்சிறு வயதில் நாங்களிருவரும் சேர்ந்து விளையாடியதைக் கண்டு மனம் பூரித்தீர்கள். பிறகு....'

**வினாக்கள்:**

(i) 'சோழப் பரம்பரை வாளின்' சிறப்புகள் குறித்து, குந்தவி இராஜேந்திரனிடம் கூறியவை யாவை? [2]

(ii) குந்தவி, அரண்மனையை விட்டு வெளியேறிய பின் எப்படி வாழப் போவதாகக் கூறினாள்? [2]

(iii) இராஜேந்திரனின் ஆட்சிச் சிறப்பு குறித்தும், அன்றைய தஞ்சாவூரின் நீர்வளம் குறித்தும் உனக்குத் தெரிந்தனவற்றை எழுதுக. [3]

(iv) சரித்திரம் எழுதுவதற்கான தகுதி குறித்தும், வருங்கால சரித்திரத்திற்கு - தான் வழங்கும் வளர்ச்சிக்கான பரிசுகள் குறித்தும், இராஜ ராஜன் நூலாசிரியரிடம் கூறியவை யாவை? [3]

## வீரபாண்டிய கட்டபொம்மன் (Veerapandiya Kattabomman)
## ஆசிரியர் - கே. ஜீவபாரதி (By – K. Jeeva Bharathi)

**Question 11**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

'குழந்தை பேசுவதற்காக குலதெய்வத்தை வேண்டினர், மருத்துவர்களை அழைத்தனர். இருப்பினும் அந்தக் குழந்தை வளர வளர பேச்சு வளராமல், ஊமை நிலையிலேயே தொடர்ந்தது. இருப்பினும் அவன் தன் அண்ணன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு வலது கரமாகத் திகழ்ந்தான். அவனுடைய வீரத்தையும், விவேகத்தையும் கண்ட மக்கள் அவனை ஊமைத் துரை என்று அழைத்தனர்'.

**வினாக்கள்:**

(i) 'கரிசல் மண்ணில் கற்குவியல்' - என்பதன் பொருள் விளக்கம் தருக. [2]

(ii) கட்டபொம்மன் பரம்பரையின் குலத்தொழில்கள் யாவை? [2]

(iii) ஜக்கம்மாள், முத்துராம் - இவர்களைப் பற்றி உமக்குத் தெரிந்த செய்திகளை எழுதுக. [3]

(iv) இந்திய மண்ணில் காலூன்றிய அயல் நாட்டு வணிகக் கம்பெனிகள் யாவை? வெள்ளையர் எதிர்ப்பில் வீரபாண்டிய கட்டபொம்மனின் முன்னோடிகள் யாவர்? [3]

**Question 12**

Read the extract given below and answer in Tamil the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

'கலெக்டர் பதவியிலிருந்து ஜாக்சன் துரை மாற்றப்படுவதற்கும், தாம் கலெக்டராகப் பொறுப்பேற்பதற்கும் காரணமான வீரபாண்டிய கட்டபொம்மன் தம்மைச் சந்திக்க வருவார் என்று லூசிங்டன் எதிர்பார்த்து இருந்தான். அழைத்தாலே அந்நிய அதிகாரிகளைச் சந்திப்பதை வெறுத்துவந்த வீர பாண்டிய கட்டபொம்மன், அழைப்பு வராமல் எப்படிச் சந்திப்பார்?......'

**வினாக்கள்:**

(i) பாஞ்சாலங்குறிச்சியின் 45, 46-வது மன்னர்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக. [2]

(ii) போரில் வெள்ளையத் தேவனின் வீரத்தையும், அவன் யாரால் காட்டிக்கொடுக்கப்பட்டு, எப்படி இறந்தான் என்பதையும் எழுதுக. [2]

(iii) குயிலி. சுந்தரலிங்கம் இவர்களில் யாருடைய தியாகம் மகத்தானது? நிறுவுக. [3]

(iv) வீர பாண்டிய கட்டபொம்மனைச் சந்திக்க எத்தனை நாட்கள், எந்தெந்த ஊர்களுக்கு எல்லாம் ஜாக்ஸன் துரை இழுத்தடித்தான்? கடைசியில் எங்கு சந்தித்தான்? [3]

**Question 13**

Read the extract given below and answer in **Tamil** the questions that follow:—

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக:—

'கம்பெனியின் அதிகாரத்துக்கு மீண்டும் மீண்டும் அவமதிப்புச் செய்யும் முறையில் நடந்து கொண்டதாலும், எந்த பாளையக்காரரும் அலட்சியப்படுத்த முடியாத அரசாங்கத்தின் காரணப் போக்கையும், நீதியையும் அவர் பல சந்தர்ப்பங்களிலும் அண்மையிலும் கண்டிருந்த போதிலும், வெளிப்படையாகக் கலகம் செய்த குற்றம் புரிந்ததாலும் கட்டபொம்மனுக்கு...'

**வினாக்கள்:**

(i) (a) அடிபட்டு ஓடியவன்

(b) உளவாளி

(c) நுழைந்தான் பிணமாய் விழுந்தான்

(d) தூக்குக் கயிறையும் துரும்பெனக் கருதியவன் - இவர்கள் யார்யார் எனக் குறிப்பிடுக. [2]

(ii) மாறுவேடத்தில் வந்த எட்டப்பன் வீர பாண்டியனிடம் ஆங்கிலேயர்களைப் பற்றி புகழ்ந்துப் பேசியவை யாவை? [2]

(iii) 'கலெக்டர் பதவி' எங்கு, யாரால் நிறுவப்பட்டது? அதன் சட்டதிட்டங்கள் யாவை? விளக்குக. [3]

(iv) 'இறுதியில் நட்பு தோற்று துரோகம் வென்றது' - யாருடைய நட்பு தோற்றது? துரோகிகள் யாவர், அவர்களுக்குக் கிடைத்தப் பரிசுகள் யாவை? [3]